| | | |
|---|---|---|
| **O.S No.** | : | **100/2011** |
| **DATE** | : | **19.02.2026** |
| **பெயர்** | : | **ரத்தினகுமார்** |
| **தந்தை பெயர்** | : | **சிற்சபை** |

**வாதி தரப்பு பி.வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**நீதிமன்ற குறிப்பு –** சாட்சியின் வயோதிகம் மற்றும் உடல்நிலை காரணமாகவும், சாட்சி இருக்கையில் அமர வைக்கப்பட்டு சாட்சியம் பதியம் செய்யப்படுகிறது. சாட்சியின் கண்பார்வை மற்றும் காது கேட்பதில் வயோதிகம் சம்மந்தமான சில பிரச்சனை இருந்ததால் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் வைத்து சாட்சியம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நான் தற்போது புதிதாக தாக்கல் செய்த ஆவணங்கள் குடும்ப அட்டை மற்றும் திருமண அழைப்பிதழ். அந்த ஆவணங்களை நான் முன்பு பார்த்துள்ளேன், அதில் உள்ள சங்கதிகள் தெரியும். மேற்சொன்ன திருமண அழைப்பிதழ் பி.வா.சா.ஆ.12, 2010 வருடத்திற்கானது தேதி, மாதம் ஞாபகமில்லை. பி.வா.சா.ஆ. –11 குடும்ப அட்டையை பாலமுருகன் (2ம் பிரதிவாதியின் ) பெயர் வருவதால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி குடும்ப அட்டையில் உள்ள பாலமுருகன் என்ற பெயரும் 2ம் பிரதிவாதியும் வேறு வேறு நபர்கள் என்று சொன்னால் சரியல்ல. திருமண அழைப்பிதழில் பாலமுருகனின் உண்மையான அப்பா, அம்மா மற்றும் தத்தெடுத்ததற்காக என் பெயரும் உள்ளது. மேற்படி அழைப்பிதழில் பாட்டனார் பெயர் என்று என்ன உள்ளது என்று எனக்கு ஞாபகமில்லை. திருமண அழைப்பிதழில் எனக்கும் பாலமுருகனுக்கும் உண்டான உறவு முறையோ, எனது முகவரியோ எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் எனக்கு ஞாபகமில்லை.

சட்டப்படி பாலமுருகனை தத்தெடுத்திருந்தால் உறவு முறை, முகவரி போட்டு அழைப்பிதழ் தயார் செய்திருப்போம் என்று சொன்னால் எனக்கு ஞாபகமில்லை. பி.வா.சா.ஆ.11 மற்றும் 12 ஆவணங்கள் குறித்து எனது பதிலுரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் எனக்கு தெரியவில்லை. கூடுதல் பிரமாண வாக்குமூலம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் எனக்கு

ஞாபகமில்லை. பி.வா.சா.ஆ.11 மற்றும் 12 ஆவணங்கள் உண்மையானதாக இருந்திருந்தால் எனது பதிலுரையிலும் குறிப்பிட்டு சொல்லியிருப்பேன் மற்றும் கூடுதல் பிரமாண வாக்குமூலமும் தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் எனக்கு ஞாபகமில்லை. இவ்வழக்கின் 5ம் பிரதிவாதி அன்பழகன் மற்றும் அவரது உறவினர்களின் கிரைய ஆவணங்கள் போலியானது, பி.வா.சா.ஆ 5 முதல் 8 கிரைய ஆவணங்கள் தவறானது அதனை நியாயப்படுத்த பி.வா.சாஆ. 11, 12 ஆவணங்களை 5ம் பிரதிவாதி அன்பழகன் மூலம் தயாரித்து இவ்வழக்கிற்காக தவறுதலாக தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

இந்த வழக்கில் காலதாமதப்படுத்த மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சாஆ. 11, 12 ஆவணங்கள் இவ்வழக்கில் வாதிகள் கோரிய பரிகாரங்களை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது வாதிகள் கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. இந்த இரண்டு ஆவணங்களையும் 5ம் பிரதிவாதியின் தூண்டுதலின் காரணமாக தாக்கல் செய்துள்ளேன், இந்த ஆவணங்களை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. இந்த இரு ஆவணங்களும் தாக்கல் செய்யும் வரை என்னிடம் தான் இருந்தது.

**இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை – இல்லை.**

FANNY RAJAN

Principal District Munsif, Kancheepuram

Digitally signed by FANNY RAJAN